PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2 - 2013

TAMIL LANGUAGE

PAPER 2

PRIMARY 5

**தாள் 2: BOOKLET A & B**

பெயர்: ______________( ) மதிப்பெண்: ________ / 90

வகுப்பு: P5/ ___________ நேரம் : 1 hr 40mins

கட்டளைகள்

1. ஆசிரியர் சொல்லும்வரை தாளைத் திருப்பாதே.
2. கட்டளைகளைக் கவனமாகப் படித்துப் பின்பற்று.
3. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

**PRIMARY SCHOOL**


**SEMESTRAL ASSESSMENT 2**

**TAMIL LANGUAGE PRIMARY 5 - 2013**

**PAPER 1 – COMPOSITION**

பெயர் : தேதி : ______________

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை /கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை /கதை எழுதுவதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.



| | |
|---|---|
| புத்தகங்களோடு | கீழே விழுந்ததை |
| மேலே பார்த்தவாறு | கண்ணாடி நறியது |
| கத்தினான் | கையடக்கத் தொலைபேசி |
| மேல் மாடியிலிருந்து | விவரங்களை |

SA- 1
தேர்வுத்தாள் - 5

**Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.**

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

திரு முத்து தன் வகுப்பு மாணவர்களைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். அதைக் கேட்ட (Q1)________ மகிழ்ச்சி ஏற்பட்டது. மறுவாரம் அனைவரையும் விலங்கியல் (Q2)________ அழைத்துச் சென்றார். அவர்கள் ஒவ்வொரு மிருகமாகப் பார்த்துக்கொண்டே சென்றனர். அப்போது அவர் (Q3)________ பற்றி விளக்கிக் கூறினார். சில மாணவர்கள் அவற்றைக் குறித்து வைத்துக்கொண்டார்கள். நீண்ட நேரம் சுற்றிப் பார்த்ததால் அவர்களுக்குக் களைப்பாக இருந்தது. அதனால், (Q4)________ வேகமாக நடக்கமுடியவில்லை. எனவே அவர்கள் தங்கள் (Q5)________ அங்குள்ள விரைவு உணவகத்துக்குச் சென்றனர். அவர்கள் உணவு வாங்கி உண்டனர். அப்போது அவர்கள் (Q6)________ நம் நாட்டு மக்கள் மட்டுமின்றி பல நாட்டுச் சுற்றுப்பயணிகளையும் கண்டனர். பிறகு சிறிது நேரம் ஓய்வு எடுத்தனர்.

Q1 (1) மாணவர்களிடம்
(2) மாணவர்களை
(3) மாணவர்களுக்கு
(4) மாணவர்களால்

( )

Q2 (1) தோட்டத்திற்கு
(2) தோட்டத்தில்
(3) தோட்டத்தை
(4) தோட்டத்திலிருந்து

( )

Q3 (1) மிருகங்களுக்கு
(2) மிருகங்களிடம்
(3) மிருகங்களை
(4) மிருகங்களோடு

( )

Q4 (1) சிலரால்
(2) சிலருடன்
(3) சிலரை
(4) சிலரிடம்

( )

Q5 (1) ஆசிரியரால்
(2) ஆசிரியருடன்
(3) ஆசிரியரிடம்
(4) ஆசிரியரே

( )

Q6 (1) உணவகத்தில்
(2) உணவகத்தை
(3) உணவகத்தால்
(4) உணவகத்திலிருந்து

( )

## A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7 கற்க கசடற ______________ கற்றபின் நிற்க அதற்குத் தக.

(1) சொல்பவை
(2) கண்டவை
(3) படிப்பவை ( )
(4) கற்பவை

Q8 மகன் தந்தைக்கு ______________ உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) தரும்
(2) ஆற்றும் ( )
(3) வழங்கும்
(4) செய்யும்

Q9 அன்பிலார் ______________ தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.

(1) எல்லாம்
(2) அனைத்தும்
(3) ஒவ்வொன்றும் ( )
(4) எல்லாவற்றையும்

Q10 _______________ உள்ளளவும் நினை.

(1) உணவிட்டவரை

(2) உப்பிட்டவரை

(3) அன்னமிட்டவரை

(4) எல்லாரையும்

( )

Q11 இளமையில் கல்வி _______________ எழுத்து.

(1) மனதில்

(2) புத்தகத்தில்

(3) கல்லில்

(4) சிலையில்

( )

Q12 அடக்கம் ஆயிரம் _______________ தரும்.

(1) தங்கம்

(2) காசு

(3) பொன்

(4) வெள்ளி

( )

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

கடுமையான குளிர்க் காலம் வந்தது. அரசரும் மற்றும் அரண்மனையில் வசிப்பவர்களும் கம்பளிகளைப் போர்த்திக்கொண்டு கடும் குளிரைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தார்கள். ஆனால், அரண்மனையில் இரவில் சேவை செய்யும் காவலர்கள் கடும் குளிரால் உடல் உறைந்துவிடுமோ என்று **அஞ்சினார்கள்.** ஆகவே, பீர்பாலை அணுகி, அக்பர் அரசரிடம் சொல்லித் தங்களுக்குக் கம்பளிப் போர்வைகளை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யும்படி வேண்டிக் கொண்டார்கள். அவ்வாறே செய்வதாகப் பீர்பாலும் காவலர்களுக்கு வாக்கு அளித்தார்.

மறுநாள் இரவு அரசர், அக்பர் கடும் குளிரில் கம்பளிப் போர்வையை அணிந்தவாறு சன்னல் ஓரம் அமர்ந்திருந்தார். அந்தச் **சமயத்தில்** அரண்மனைத் தோட்டத்தில் யாரோ ஒருவன் குளிரையும் பொருட்படுத்தாமல் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தார். காவலர்களை அனுப்பி அந்த மனிதரை அழைத்து வரும்படி சொன்னார். அவ்வாறு அழைத்து வரப்பட்ட மனிதர் வேறு யாரும் அல்ல, பீர்பால்தான்.

"என்ன பீர்பால்! இந்தக் கடுமையான குளிர் இரவில் தோட்டத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று அக்பர் கேட்டார். அதற்குப் பீர்பால், "அரசே! அந்தக் கொடிய குளிருடன் நான் பேசிக் கொண்டிருந்தேன்," என்றார். "நீங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே!" என்றார் அரசர். "அரசே! தங்களிடம் விலையுயர்ந்த கம்பளிப் போர்வைகள் இருக்கின்றன. அதனால், குளிரால் உங்களுக்குத் துன்பம் இல்லை. ஆனால், என்னைப் போன்று, அரண்மனையில் வேலை பார்க்கும் இரவுக் காவலர்களும் இந்தக் கொடிய குளிரை எப்படிச் சமாளிக்க முடியும்? அதனால், குளிரைப் பார்த்து, 'குளிரே! குளிரே! நீ வசதிக் குறைவுள்ள அரண்மனைக் காவலர்கள் போன்றவர்களிடம் உன் கடுமையைக் காண்பிக்காமல் கொஞ்சம் இரக்கம் காட்டி இதமாக நடந்துகொள்' என்று **வேண்டினேன்!**" என்றார். அரசர் பீர்பால் சொல்வதைப் புரிந்துகொண்டார்.

அவர் மறுநாளே அரண்மனைக் காவலர்கள் அத்தனைப் பேருக்கும் கம்பளிகளை இலவசமாக அளிக்கும்படி உத்தரவிட்டார். அதோடு பீர்பாலுக்கும் ஒரு கம்பளிப் போர்வையை அளித்தார்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13 அரசரும் அரண்மனையில் வசிப்பவர்களும் குளிரில் சுகமாக இருந்ததற்குக் காரணம் என்ன?

(1) அரண்மனையில் வசித்ததால்
(2) கம்பளிப் போர்வை இருந்ததால்
(3) உயர்ந்த ஆடைகள் இருந்ததால்
(4) அரண்மனையில் குளிர்க்காற்று வீசாததால்

( )

Q14 பீர்பால் காவலர்களுக்கு என்ன வாக்குறுதி அளித்தார்?

(1) குளிர்க்காற்று வீசாமல் பார்த்துக்கொள்வதாக
(2) காவலர்கள் இரவில் வேலை செய்யவேண்டாமென்று
(3) பீர்பால் தானே கம்பளிப் போர்வைகளை வாங்கி வழங்குவதாக
(4) அரசரிடம் கம்பளிப் போர்வை வழங்கும்படி சொல்வதாக

( )

Q15 குளிர்க்காற்றுடன் பேசிக்கொண்டு இருந்தவர் உண்மையில் யார்?

(1) பீர்பால்
(2) அரசர்
(3) காவலர்
(4) யாரோ ஒருவர்

( )

Q16 அரசர் தனக்கு ஒன்றும் புரியவில்லை என்று ஏன் சொன்னார்?

(1) பீர்பால் உளறியதால்

(2) பீர்பால் காற்றுடன் பேசியதாகக் கூறியதால்

(3) பீர்பால் காவலர்களுக்காகப் பேசியதால் ( )

(4) பீர்பால் அதிகம் பேசியதால்

Q17 அரசர் காவலர்களுக்குக் கம்பளிகளை இலவசமாக அளிக்கக் காரணம் என்ன?

(1) பரிசு அளிக்க எண்ணியதால்

(2) காவலர்கள் அவரிடம் நேரடியாகக் கேட்டதால்

(3) காவலர்கள் படும் துன்பத்தை அறிந்துகொண்டதால் ( )

(4) பீர்பால் கேட்டுக்கொண்டதால்

<u>**B4** சொற்பொருள்</u>

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(6 மதிப்பெண்கள்)

Q18 அஞ்சினார்கள்

(1) ஒதுங்கினார்கள்
(2) துணிந்தார்கள்
(3) பயந்தார்கள்
(4) நினைத்தார்கள் ( )

Q19 சமயத்தில்

(1) அப்போது
(2) காலையில்
(3) பகலில்
(4) நேரத்தில் ( )

Q20 வேண்டினேன்

(1) கேட்டேன்
(2) கெஞ்சினேன்
(3) உத்தரவிட்டேன்
(4) சொன்னேன் ( )

**B5** கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

ஜூரோங் சமூக மன்றத்தைச் சேர்ந்த இந்திய நற்பணிக் குழு நடத்தும்

# சிறுவர் தினக் கலைநிகழ்ச்சி


இடம் : ஜூரோங் சமூக மன்ற மண்டபம்

நாள் : 01.10.2009

நேரம் : காலை 9 மணி முதல் 12 மணி வரை

**மந்திரக் காட்சி**

புகழ்பெற்ற மந்திரவாதி உங்களை மலைக்க வைக்க வருகிறார். அதோடு சில மந்திரக் காட்சிகளை எப்படிச் செய்வது என்றும் காண்பிப்பார்.



தேசிய நடனப்போட்டியில் முதல் பரிசைப் பெற்ற 'சிகரம்' நடனக் குழுவினர் கண்களுக்கு இனிய நடனம் படைக்க இருக்கின்றனர்.

நீங்கள் 5 முதல் 12 வயதுக்கு உட்பட்டவர்களாக இருந்தால் செப்டம்பர் 30 தேதிக்குள் உங்கள் பெற்றோருடன் வந்து பெயரைப் பதிவு செய்துவிடுங்கள். அனுமதி இலவசம். மேலும் விவரங்கள் அறிய எங்கள் அலுவலகர் திரு முத்துவுடன் தொடர்புக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 60606060

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21 இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர் யார்?

(1) வசிப்போர்க் குழு
(2) சமூக மன்றம்
(3) ஜூரோங் சமூக மன்ற இந்திய நற்பணிக்குழு ( )
(4) திரு. முத்து

Q22 இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் சிறுவர்கள் எதைக் கற்றுக்கொள்ளலாம்?

(1) நடனம் ஆட
(2) பாடல் பாட
(3) மந்திரவாதியைப்போல் புகழ் அடைய
(4) சில மந்திரக்காட்சிகளை எப்படிச் செய்வதென்று ( )

Q23 கலைநிகழ்ச்சியைக் காணச் சிறுவர்கள் என்ன செய்யவேண்டும்?

(1) சிகரம் நடனக் குழுவினருடன் ஆட வேண்டும்
(2) மந்திரக் காட்சிகளைச் செய்து காட்டவேண்டும்
(3) தங்கள் பெற்றோருடன் சென்று பதிவு செய்யவேண்டும் ( )
(4) திரு முத்துவுடன் தொடர்புக் கொள்ளவேண்டும்

**Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.**

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

Q24 என் மாமா பெரிய வீடு வாங்கினார். அதில் படிப்பதற்கு ஒரு சிறிய ______________ இருக்கிறது. Q24 (   )

Q25 அம்மா மல்லிகைப்பூ வாங்கி வந்தார். பூக்களின் ______________ வீடு முழுவதும் பரவியது. Q25 (   )

Q26 அத்தை ஒரு வைர மோதிரம் வாங்கினார். அந்த வைரம் ______________ வீசியது. Q26 (   )

Q27 நான் ஓடும்போது கீழே விழுந்துவிட்டேன். அதனால், காலில் ______________ ஏற்பட்டது. Q27 (   )

Q28 என் வீட்டுக்கு விருந்தினர் வந்தார். அம்மா வாழை ______________ ஒன்றில் உணவு பரிமாறினார். Q28 (   )

| | |
|---|---|
| 1 வலி | 2 மணம் |
| 3 அரை | 4 ஒலி |
| 5 இலை | 6 இளை |
| 7 மனம் | 8 அறை |
| 9 ஒளி | 10 வழி |

## D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வறிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| ஒரு நாள் மாறன் பள்ளியை நோக்கி நடந்து சென்றுகொண்டு இருந்தான். அவன் போகும் வழியில் கால் ஊனமுற்ற சிறுவன் ஒருவன் சாலையை (Q29)______ நின்றுகொண்டிருந்தான். | Q29 (     ) |
| அப்போது சாலையில் வாகனங்கள் வேகமாகச் சென்றன. அவனால் சாலையைக் கடக்க (Q30)______ என்று மாறன் | Q30 (     ) |
| உணர்ந்தான். அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் (Q31)______. அவன் சிறுவன் | Q31 (     ) |
| அருகில் சென்று, "நீ சாலையைக் கடக்க நான் உதவி செய்கிறேன்," என்று கூறினான். அவன் மகிழ்ச்சியுடன் கையை (Q32)______. அவனுடைய கையைப் பிடித்து மாறன் | Q32 (     ) |
| அழைத்துச் சென்றான். இருவரும் சாலையைக் கடந்தனர். சிறுவன் மாறனுக்கு (Q33)______ கூறிவிட்டுத் தன் வழியே | Q33 (     ) |
| நடந்து சென்றான். அவனுக்கு உதவி செய்ததை எண்ணி (Q34)______ மாறன் அதன்பின்னர் பள்ளிக்குச் சென்றான். | Q34 (     ) |
| அவன் நடந்ததைத் தன் ஆசிரியரிடம் கூறினான். அவர் மாறனின் நற்செயலை (Q35)______. பிறகு அவர் வகுப்பு மாணவர்களிடம் அவன் செய்த செயலைப் பற்றிக் கூறி அவனைப் புகழ்ந்தார். | Q35 (     ) |

| | | |
|---|---|---|
| (1) அறிவுரை | (2) இயலாது | (3) மகிழ்ச்சியடைந்த |
| (4) நன்றி | (5) தோன்றியது | (6) பாராட்டினார் |
| (7) கடப்பதற்காக | (8) அதனால் | (9) நீட்டினான் |
| (10) ஆட்டினான் | (11) எண்ணி | (12) இருவரும் |

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

மீனாட்சி தன்னிடம் உள்ளதைப் பலருக்குக் கொடுக்கும் பண்பு கொண்டவர். அவருக்கு திலீப் ஒரே மகன். அவர் கணவர், விபத்தில் இறந்துவிட்டார். தந்தையில்லாத குறையைப் போக்குவதற்காக மீனாட்சி அயராது உழைத்து அவனுக்கு வேண்டியதை வாங்கித் தருவார். அவனை எந்த குறையும் இல்லாமல் வளர்த்தார். தன் மகனைப் பலரும் புகழும்படி வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். திலீப் சாதுவான பையன். அதோடு யாரிடமும் எதிர்த்துப் பேசமாட்டான். அதனால், அவனை எல்லோரும் 'வாயில்லாப்பூச்சி' என்று சொல்வார்கள்.

திலீப்பின் நண்பன், ரவி, சுயநல குணம் உடையவன். தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுக்க விரும்பாதவன். எல்லோரிடமும் எதையாவது எதிர்ப்பார்த்துப் பழகுவான். திலீப்பின் இன்னொரு நண்பன் சீலன். சீலன் மிகவும் நல்லவன். அதனால், சீலன் திலீப்பிடம், "ரவியுடன் கவனமாகப் பழகு," என்று எச்சரித்தான். ஆனால், திலீப் அவன் சொன்னதைக் கேட்கவில்லை. சீலன் தன் நண்பனான ரவியைப் பற்றிக் குறை சொல்கிறான் என்று நினைத்து அவனுடன் பழகுவதை நிறுத்தினான். மூவரும் கல்வியில் கண்ணும் கருத்துமாகப் படித்தனர். ஆனால், சீலன் இருவரையும்விட கல்வியில் சிறந்து விளங்கினான்; வகுப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்தான். அதனால், ரவிக்குச் சீலன் மீது பொறாமை ஏற்பட்டது.

ஒருநாள் வகுப்பு மாணவர்கள் அனைவரும் இயற்கைப் பூங்காவுக்குச் சுற்றுலா சென்றனர். அப்போது திலீப் அருகில் இருந்த குளத்திற்குச் சென்று மீன்களை வேடிக்கை பார்த்தான். அதைத் தொடக் குளத்தில் கையை நீட்டினான். திடீரென்று கால் வழுக்கிக் குளத்தில் விழுந்து விட்டான். அப்போது கரையில் நின்றிருந்த ரவி அவனைக் காப்பாற்றவில்லை. குளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த திலீப், "ரவி! என்னைக் காப்பாற்று!" என்று கதறினான். திலீப்பின் குரலைக் கேட்டுச் சீலன் ஓடி வந்தான். சீலன் குளத்தில் குதித்துத் திலீப்பைப் பிடித்து அவனைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

திலீப் மெதுவாக கண்களைக் திறந்து பார்த்தான். சீலன் நனைந்த உடையுடன் அருகில் அமர்ந்திருப்பதைப் பார்த்தான். சீலன் தான் தன்னைக் காப்பாற்றியவன் என்பதை உணர்ந்தான். உண்மையான நண்பன் யார் என்பதைத் திலீப் அப்போது அறிந்து கொண்டான்.

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. திலீப்பின் தாயார் அவனுக்குத் தந்தை இல்லாத குறையை எவ்வாறு போக்கினார்? (3 )

________________________________________

________________________________________

________________________________________

37. திலீப்பை எல்லோரும் 'வாயில்லாப்பூச்சி' என்று சொன்னதற்குக் காரணம் என்ன?(3)

________________________________________

________________________________________

________________________________________

38. ரவியுடன் ஏன் கவனமாகப் பழக வேண்டும் என்று சீலன் திலீப்பிடம் சொன்னான்?(4)

________________________________________

________________________________________

________________________________________

39. ரவி ஏன் சீலன் மீது பொறாமை கொண்டான்?(3)

40. திலீப் எப்படிக் குளத்தில் விழுந்தான்? (3)

41. சீலன் தான் தன்னைக் காப்பாற்றியவன் என்று திலீப் எப்படித் தெரிந்து கொண்டான்? (4)

## P5 SA2
## TESTPAPER 10

திரு. முத்து தன் வகுப்பு...

1)3 2)1 3)3 4)1 5)2 6)1 7) 4 8)2 9)1 10)2 11)4 12)3 13)2 14)4 15) 1 16)2 17)4 18)3 19)4 20)2 21)3 22)4 23)3 24)8 25)2 26)9 27)1 28) 5 29)7 30) 2 31)5 32)9 33)4 34) 3 35)6

36) திலீப்பின் தாயார் அயராது உழைத்து அவனுக்கு வேண்டியதை வாங்கித் தருவார். அவனை எந்தக் குறையும் இல்லாமல் வளர்த்தார். இவ்வாறே திலீப்பின் தாயார் அவனுக்குத் தந்தை இல்லாத குறையைப் போக்கினார்.

37)திலீப் சாதுவான பையன். மேலும் அவன் யாரிடமும் எதிர்த்துப் பேசமாட்டான். அதுவே அவனை எல்லோரும் 'வாயில்லாப் பூச்சி' என்று சொன்னதற்குக் காரணம்.

38) ரவி சுயநல குணமுடையவன்.தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுக்க விரும்பாதவன்.எல்லோரிடமும் எதையாவது எதிர்பார்த்துப் பழகுவான்.அதனால் ரவியுடன் கவனமாகப் பழக வேண்டும் என்று சீலன் திலீப்பிடம் சொன்னான்.

39) சீலன், பாலன் மற்றும் ரவி இருவரையும் விட கல்வியில் சிறந்து விளங்கினான்.வகுப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்தான். அதனால் ரவிக்குச் சீலன் மீது பொறாமை ஏற்பட்டது.

40)திலீப் தன் வகுப்பு மாணவர்களோடு இயற்கைப் பூங்காவுக்குச் சுற்றுலா சென்றான். அவன் அருகில் இருந்த குளத்திற்குச் சென்று மீன்களை வேடிக்கை பார்த்து அதைத் தொடக் கையை நீட்டியபோது கால் வழுக்கி குளத்தில் விழுந்தான்.

41) குளத்திலிருந்து காப்பாற்றப்பட்ட திலீப் கண்களைத் திறந்த போது சீலன் நனைந்த உடையுடன் அருகில் அமர்ந்திருப்பதைப் பார்த்தான்.அதன் மூலம் சீலன் தான் தன்னைக் காப்பாற்றியவன் என்று தெரிந்து கொண்டான்.